உ

சிவமயம்



நாவற்குழியூர் வைத்யகலாமணி

பிரம்மஸ்ரீ ந. சிவஸ்வாமி குருக்கள்

அவர்களின் தர்மபத்தினி

## ஸ்ரீமதி செல்லம்மா அம்மாள் அவர்களின்

சிவபதப் பேற்றை முன்னிட்டு மலர்ந்த

# ஆத்மசாந்தி மலர்கள்

**1991**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஸ்ரீமதி செல்லம்மா அம்மாள்

அவர்கள்



மண்ணுலகம்
25-05-1907

விண்ணுலகம்
25-02-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# விநாயகர் புராணம்

மண்ணுலகத் தினிற்பிறவி மாசு அற
எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

# லிங்காஷ்டகம்

ப்ரம்ம முராரி சுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்ம ஜயதுக்க விநாசக லிங்கம்
தத்ப்ரண மாமி சதாசிவ லிங்கம்

தேவமுனிப் ரவரார்ச்சித லிங்கம்
காமத ஹங்கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசந லிங்கம்
தத்ப்ரண மாமி சதாசிவ லிங்கம்

சர்வ சுகந்தி சுலேபித லிங்கம்
புத்தி விவர்கன காரண லிங்கம்
சித்த சுராசுர வந்தித லிங்கம்
தத்ப்ரண மாமி சதாசிவ லிங்கம்

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித் சோபித லிங்கம்
தக்ஷசுயக்ஞ விநாசந லிங்கம்
தத்ப்ரண மாமி சதாசிவ லிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்கும சந்தனலேபத லிங்கம்
பங்கஜ ஹார சுசோபித லிங்கம்
ஸஞ்ஜித பாப விநாசன லிங்கம்
தத்ப்ரண மாமி சதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித சேவித லிங்கம்
பானவர் பக்தி பிரவேச லிங்கம்
திநகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரண மாமி சதாசிவ லிங்கம்

அஷ்டத ளோபரி வேஷ்டித லிங்கம்
சர்வச முத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத்ப்ரண மாமி சதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவந புஷ்ப சதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரண மாமி சதாசிவ லிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிரம்மஸ்ரீ ந. சிவஸ்வாமி குருக்கள்

## அவர்களின் தர்மபத்தினி

# ஸ்ரீமதி செல்லம்மா அம்மாள் அவர்களின்

# ஆத்ம சாந்தி மலர்கள்

1) நந்தமிழின் யாழ்ப்பாண நனி நகரில்
நாவற் குழியூரின் அந்தணர் கோன்
சிந்தையிலே கல்விகலை மிளிரும் நாமன்
சிவஸ்வாமிக் குருக்களவர் பத்னி யான
சுந்தரியாள் செல்லம்மா அம்மாள் எனும்
சுகுணவதி பாக்யவதி அன்னையான
பந்தமிகு பசுங்குணத்தாள் சிவனின் பாதம்
பக்குவமாய்ச் சென்றடைந்தாள் பெறுக சாந்தி.

2) சிவஸ்வாமி ஐயரவர் பத்னி யான
செல்லம்மா அம்மாளும் கல்வி கலை
புவிமீதில் வைத்யத்தின் நுணுக்கம் யாவும்
பூரணமாய் ஆய்ந்துணரும் ஆற்றல் மிக்காள்
தவமான தலைவனவன் வைத்திய நூல்கள்
தத்துவத்தின் சிவசாமிக் குருக்களோடு
நவமான மருத்துவநூல் முறைகள் தந்த
மாதாவாம் செல்லம்மா பெறுக சாந்தி.

3) நாவற் குழியூரில் செல்லம் மாளும்
நளினமிகு இல்லறத்தின் தர்மம் யாவும்
ஆவல் மிகும் தலைவனவன் அகம் குளிர
ஆற்றினுள் உலகமது போற்றிற் றம்மா!
சேவையே செய்தனளோ செய்த சேவை
செகமெங்கும் மறக்க வொணாப் பெரிய தொண்டு
பாவையிவள் பாருலகில் லக்ஷியத் தாய்
பண்பான செல்லம்மாள் பெறுக சாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) ஈன்றெடுத்த மதலைகளோ எண்மர் ஆவர்
இனியவராம் சாரதாவும் சிவராஜாவும்
ஆன்றகலைக் கல்யாணி நிர்தனராஜன் சேர்
அழகு குமாரராஜன் விஸ்வேஸ்வரன்
மான் போன்ற சுபேஸ்வரியும் மிர்த்திஞ் ஜெயன்
மணியான எண்மர்தனை ஈறெடுத்தாள்
வான் போன்ற மாரியாருள் செல்லம்மாவும்
மருவினளே சிவபதமும் பெறுக சாந்தி

5) பெற்றெடுத்த குழந்தைகளை பேணி வளர்த்தாள்
பெருங்கல்வி கலைகளையும் அருங்குணங்கள்
ஆற்றலிலும் அறிவினிலும் மேன்மை கொள்ள
அவனியிலே ஆக்கி வைத்து அறிவுரைகள்
சாற்றிடுவாள் சற்குணத்தால் தனியே நின்றே
சற்புத்திரர் தம்மை வளர்த்த அன்னை
வீற்றிருந்தே குருவாகத் தெய்வமாக
விளங்கிடும் செல்லம்மா பெறுக சாந்தி.

6) அன்னையுமாய் குருவுமாகி தெய்வமானாள்
ஆருக்கும் சேவை செய்யும் சேவகியாய்
தன்னையே உருக்கியவள் மெழுகு வர்த்தி
தளிர்ஜோதி தருவதைப் போல் மிளிர்ந்தே நின்றாள
வன்வடி வழகியவள் வாழ்க்கை தன்னை
வளமாரச் சேவையிலே அர்ப்பணித்தாள்
நன்னமாய் இன்சொல்லே இயம்பிடும் தாய்
நானிலத்தில் மறைந்தனளே பெறுக சாந்தி.

7) கலைவாழும் இணுவையில் நாகரத்தினக்
குருக்களவர் தம்பதிகள் ஈன்ற பூவை
பலவானாம் ராமையாக் குருக்களொடு
பாவையாம் செல்லம்மா ராஜம்மாவும்
நிலையான தமிழ்ச்செல்வன் ஸ்ரீநிவாச
பண்டிதரோ டுதித்திட்டாள் அணங்காமிவள்
அலையாத மனம் கொண்ட அன்னையான
அன்பு தவழ் செல்லம்மா பெறுக சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் நினைவில்!

அன்னை எனவா நினைத்திருந்தோம் நாம்
முன்னறி தெய்வம் என்றிருந்தோம் - நன்னெறி
யாவும் பயிற்று வித்தீர் எமக்கு
ஏவும் பணிகளோ நற்பணியாம்.

பணி செய்து கிடப்பதாம் கொள்கையதை
தணியாத தாகமாய் பெற்றிருந்தீர் - துணியாத
செயல் ஒன்று உமக்கில்லையே
அயல் அவர்க்கு உதவியே செய்திருப்பீர்

இருந்ததோ தந்தையொடு சொற்பகாலம் அதில்
மருந்துகள் செய்முறை அறிந்து விட்டீர் — விருந்தென
வந்தாலும் அவர் தமக்கு அமிர்தமாய்
தந்திடுவீர் நல் உணவு.

உணவென்ன உடையென்ன கல்வி வசதியென்ன
பணமில்லாத போதிலும் தந்து வந்தீர் — குணத்தினில்
குன்றாக நின்றிருந்தீர் பிணக்குகள் வரும்போது
மன்றாக தீர்த்து வைப்பீர்.

அன்னையெனவா நினைத்திருந்தோம் நாம்
முன்னறி தெய்வம் என்றிருந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாதர் குல மாணிக்கம்"

நான் ஒரு சிறுவனாகப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் சகல செல்வங்களோடும் எமது அயலில் வாழ்ந்து எமது கிராம மக்கள் நோய் கண்ட போதெல்லாம் தனது கணவனாருடைய தொழிலில் இணைந்து எம்மவரது பிணிய கற்றிய அரும் தொண்டினை மறக்க முடியாது. அயலவர்களுக்கு மட்டுமன்றி ஊரிலுள்ள அனைத்து மக்களுக்கும் இத்தகைய தொண்டாற்றி அவர்களது மதிப்பையும் பாராட்டுதல்களையும் பெற்றவர் அமரர் சிவசாமி ஐயர் செல்லம்மா அவர்கள்.

எத்துணைத் துன்பத்தின் மத்தியிலும் தனது இல்லம் நோக்கி வருத்தத்துடன் வந்தவர்களைக் கலங்க விடாது கைகொடுத்து அணைத்த இப்பெருந்தகையின் ஆத்மா சாந்தியடைய முருகப் பெருமான் அருள் பாலிக்க வேண்டும் என அப்பெருமானது பாதார விந்தங்களை இறைஞ்சும் அதேவேளை தமது அன்னை என்ற உருவில் இருந்து அருள் பாலித்த அன்புத் தெய்வத்தைக் காண்போமா என ஏங்கித் தவிக்கும் அன்னாரது பிள்ளைகள், பேரமக்கள் ஆகியோரது துயரையும் நீக்கி அருள் புரிந்து அவர்கள் சகல செல்வங்களுடனும் வாழ சித்திரவேற் பெருமான் அருள்புரிவாராக என வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி.

சி. தில்லைநாதன்
ஆசிரியர்

நாவற்குழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவியவர் ஈமக்கிரியைகளின் போது சமுகந் தந்தோருக்கும், அனுதாபத் தந்திகள், கடிதங்கள் அனுப்பியோருக்கும், இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிற் பங்குகொண்டோருக்கும் எங்கள் அன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாவற்குழி.
06-03-91

இங்ஙனம்,
அன்னாரின் குடும்பத்தினர்.

சிவா பிறின்டேர்ஸ், கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org